ISSN:2278-2311

22782311

KONGU

KONGUNADU PUBLICATIONS (INDIA) PVT.LTD

TIP

# Literary findings

ISSN: 2278-2311

A PEER REVIEWED INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLAINARY RESEARCH

OCTOBER – 2015



# TIP

THE INDIAN PAGES

LITERARY FINDINGS

## A PEER REVIEWED INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

## ISSN: 2278-2311

**VOL: 4** **ISSUE: 4**

**OCTOBER – 2015**



**Editor**

**Dr. P. Sathyamoorthy**
Madurai Kamarajar University, Madurai.

**Editorial Board**

**Dr. C. Thiyagarajan**
Annamalai University, Chidambaram.
**Dr. K. Ramesh**
Thiruvalluvar University, Vellore.
**Dr. S. Srinivasan**
Sri Venkateshwara College,
(Delhi University) New Delhi.
**Dr.K.Kala**
Joint Director of Collegiate Education, Trichy.
**Dr.L.R.Gopinath**
Vivekanandha Educational Institutions, Namakkal,



**Kongunadu Publications (India) Pvt.Ltd**
118,Mettur Road 2nd Floor,
Mettur Road, Erode – 638 011.
Ph: 0424 – 4562211,2263197
E-mail: kongunadupublications@gmail.com
Web: www.kongunadupublications.com



**ஆசிரியர்**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.*

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி. தியாகராசன்**
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.*

**முனைவர் க. இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.*

**முனைவர் ச. சீனிவாசன்**
*ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி*
*(தில்லி பல்கலைக்கழகம்)புது தில்லி.*

**முனைவர் க.கலா,**
*கல்லூரி கல்வி இணை இயக்குநர், திருச்சி.*

**முனைவர் எல்.ஆர்.கோபிநாத்**
*விவேகானந்த கல்வி நிறுவனங்கள், நாமக்கல்,*



**KONGU**

**கொங்குநாடு பப்ளிகேஷன்ஸ் இந்தியா பி.லிட்**
*194, கண்ணா காம்ப்ளக்ஸ்,*
*2- வது தளம், மேட்டூர் ரோடு,*
*ஈரோடு - 638 011.*
***மின்னஞ்சல்:*** kongunadupublications@gmail.com

# TIP

## LITERARY FINDINGS

# GUIDELINES FOR AUTHORS

TIP (The Indian Pages) a new bilingual International Journal(English & Tamil) being published from the house of **KONGUNADU PUBLICATIONS (INDIA) PRIVATE LIMITED**, Erode, Tamil Nadu, with **ISSN** (index in Google Scholar & DOAJ)

This journal is mainly devoted to research and scholarly views on broad issues in the field of **Arts, Science and Commerce**. The journal provides specialized opinion in the field of **Arts & Science** and will also bring out meaningful notes and research papers. And the Articles are welcomed at the most.

TIP (The Indian Pages) accepts only electronic submissions via e-mail as attached documents (**Microsoft word only**) which **must include Name, affiliation and country in the body of your submission.** (Submission must be in single attachment) Authors are requested to follow the **MLA** style strictly while preparing the articles. Authors are also requested to include the following in the format of their articles.

• Type area on a page should of standard size A4

• Uniform font (Times Roman) may be used

• Paragraph setting may be set as 1.5 lines

• Where ever necessary chapter should begin with a brief Abstract and keywords.

• Paper Title, Author Names/Affiliations, Abstract and Keywords should be specified accordingly.

**1. ORDER OF THE CONTENT**

The order of the content must be as per following sequence;

1. Title Page with Authors details (Including emails and affiliations)
2. Abstract & Keywords
3. Introduction
4. Methods, if applicable / any
5. Results, if applicable / any
6. Conclusions
7. Acknowledgements, if applicable / any
8. References
9. Appendices (if applicable / any)

**2. FIGURES (Line Art Drawings) AND TABLES**

Figures and tables may appear printed directly in the text and should be black and white or grayscale. Figure should appear soon after the citation in the text or if it is too large at the end of the manuscript. Legends/Captions for figures A caption should be provided for each figure.

**TABLES**

Indent tables slightly from the left margin, if it is necessary to use the full width of the page. Tables should be kept to a minimum and be designed to be as simple as possible. Tables are to be typed double - spaced throughout, including headings and footnotes. Each table should be on a separate page, numbered consecutively in Arabic numerals and supplied with a heading and a legend. The same data should not be presented in both table and graph forms or repeated in the text.

**3. REFERENCES**

References text type should be 10 point (Times Roman). In the text, a reference identified by means of an author's name should be followed by the date of the reference in parentheses. When there are more than two authors, only the first author's name should be mentioned.

**4. SUBSCRIPTION FEE**

Annual Subscription Fee for Individuals Rs. 1500/-, Institution Rs. 2000/- , Life Subscription Fee Individuals & Institution Rs. 10000/ in India.

**5. MODE OF PAYMENT**

Payment can be made by DD infavour of **KONGUNADU PUBLICATIONS INDIA PRIVATE LIMITED** payable at **ERODE** and address to **KONGUNADU PUBLICATIONS (INDIA) PRIVATE LIMITED** REGD OFF: 194, KANNA COMPLEX, 2ND FLOOR, METTUR ROAD, ERODE – 638 011. Payments can also be made via net banking. **A/c Name: KONGUNADU PUBLICATIONS INDIA PVT.LTD. A/C Type: CA, A/C No:1619135000005931**, **Bank: KVB, V.Chatram, ERODE – 638 003. IFSC: KVBL0001619** and the same may be intimated.

**6. SELECTION OF ARTICLES**

Our eminent Editorial team will scrutinize the articles and select for TIP without any bias. On selection the authors will be intimated individually. For further clarification contact us: tip.theindianpages@gmail.com.

# CONTENT


**1.** நாட்டுப்புறக் கதைகளில் இடப் பெயர்ச்சியும் சமூகப் பின்புலமும்
- *முனைவர் க.சந்திரசேகரன்* **5**

**2.** காவல் கோட்டம் "நாவலில் இனவரைவியல் செய்திகள்"
- *ப.லோகாம்பாள்* **9**

**3.** கொங்கு வேளாளர்கள் பயன்படுத்தும் பொருள்களும் உணவுமுறைகளும் - ***N.மணிமேகலை*** **12**

**4.** பழமொழிகளில் மருத்துவம் - *வி.ம.ரம்யா* **18**

**5.** டி. செல்வராஜ் தோல் புதினத்தில் பெண்ணியபார்வை
- *பெ. சிவஜோதி* **21**

**6.** MAN WOMAN RELATIONSHIP IN ANITA DESAI'S WHERE SHALL WE GO THIS SUMMER? ***- A.D.SASIKALA*** **24**

**7.** REJUVENATION OF SPIRIT IN SASHI DESHPANDE'S THE DARK HOLDS NO TERRORS
***- Dr.S.GOMATHI*** **28**

**8.** EMPOWERMENT OF WOMEN THROUGH EDUCATION
***- Dr.B.RAMU*** **31**

**9.** HISTORY AND GROWTH OF THE TEXTILE INDUSTRY IN COIMBATORE DISTRICT 1900-1950 ***- P.KANNAN*** **35**

**10.** PLANNING – THE ROOT CAUSE OF THE ECONOMIC DEVELOPMENT OF CONTEMPORARY INDIA ***- T.RAJENDIRAN*** **37**

**11.** பெரியார் பார்வையில் பெண்ணியம் - ***முனைவர் சே.தெய்வக்கன்னி*** **40**

**12.** அன்பின் வழியது - **முனைவர் ம.ஜெயந்தி** **43**

**13.** MARITAL AND PREMARITAL COUNSELLING IN CUDDALORE DISTRICT
***- Dr. N. MADHAVAN*** **45**

**14.** ORGANIZATIONAL ROLE STRESS AND JOB SATISFACTION AMONG ONGC EXECUTIVES OF KARAIKAL ***- Dr. N. SULAIMAN*** **50**

**15.** DEGRADATION OF PESTICIDES BY RHIZOSPHERIC BACTERIA ISOLATED FROM SOIL OF *Prosopis juliflora* ***- Dr. K. KALA,***
**Dr. L. R. GOPINATH, S. VIJAYAPRADHA & S. RESHMI** **56**

**16.** LEVEL OF IMPORTANCE TOWARDS REASON FOR BUYING A TWO WHEELER, COMPANY OWNED, MODE AND SOURCES OF PURCHASING BY TEENAGERS'
***- Dr.K.SETHURAMAN*** **65**

**17.** பட்டினப்பாலை காட்டும் சங்ககாலத் தமிழக-வெளிநாட்டு வணிகத் தொடர்புகள்
**- ப. குணசுந்தரி** **70**

# நாட்டுப்புறக் கதைகளில் இடப் பெயர்ச்சியும் சமூகப் பின்புலமும்

**முனைவர் க.சந்திரசேகரன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*அறிஞர் அண்ணா அரசு கல்லூரி*
*நாமக்கல்.*

**முன்னுரை**

ஒவ்வொரு மாநிலத்திலும் மற்றும் மாவட்டத்திலும் உள்ள நாட்டுப்புற மக்கள் எங்கிருந்தோ வந்தவர்கள் எனலாம். காரணம் பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து வந்திருப்பதை உணரலாம். நாட்டுப்புற வழக்காறு என்பது மக்களால் வழங்கப்பட்டு வரும் வாய்மொழிக் கதைகள் எல்லா ஊர்களிலும் பல்வேறு பகுதிகளிலும் விரவிக் காணப்படுகின்றன. கரூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு வகையான இன மக்கள் இங்கு இடம் பெயர்ந்து வந்த வரலாறு நாட்டுப்புறக் கதைகளின் வழியாக ஆராயப்படுகிறது.

**நாட்டுப்புறக் கதைகள்**

கதைகள் யாவும் ஏதேனும் நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவைகளே எனலாம். நாட்டுப்புற மக்களின் கற்பனை, அறிவு, நுணுக்கம், எண்ணங்கள் ஆகியன நாட்டுப்புறக் கதைகளில் வெளிப்படும். நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். மரபு வழிப்பட்டதாகம். பலநூற்றாண்டுகளாக மக்களிடையே வாய்மொழியாக வழங்கிவருவதால் திரிபடைவதைக் காணமுடிகிறது. மேலும், மண்ணுக்கேற்ற நாட்டுப்புறக் கதைகள். இக்கதைகளின் வாயிலாக நீதிக்கருத்துக்கள், தீமையை அழித்தல், கருணை, உதவி செய்தல், தவறான நடத்தைகள்,ஆசைகள், கோபம், பொறாமை இடம்பெயர்தல், நம்பிக்கை, பழக்கவழங்கங்கள் போன்றன இடம் பெறுவதை உணரலாம்.

மேலும், மானிடவியலாளர்கள், சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள், தத்துவவியலாளர்கள் என அனைவரும் அவரவர்கள் நோக்கில் கதைகளுக்கு விளக்கம் கூறுகின்றனர். இயற்கை மாறுதல்களையும், உற்பாதங்களையும் உருவகங்களாக, விளக்குவதற்காகக் கதைகள் ஏற்பட்டுள்ளன.

**தொல்காப்பியமும் கதையும்**

தமிழில் தொல்காப்பியர் காலந்தொட்டே கதைகள் மக்களிடையே வழங்கி வந்திருக்கின்றன. தொல்காப்பியர் கதைகளைப் ‘பொருளொடு புணராப் பொய்மொழி’ என்று குறிப்பிடுகிறார். இதனை,

*“பொருள் மரபில்லா பொய்மொழியானும்*
*பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்”* ***(தொல்.செய்.173)***

என்ற நூற்பாவின் வாயிலாக இருவகைக் கதைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், தொல்காப்பிய உரையாசிரியர்களில் பேராசிரியர் மேலே சொல்லப்பட்ட நூற்பாவிற்க உரை எழுதும்போது “யானையும் குருவியும் தம்முள் நட்பு கொண்டு இன்ன இடத்திற்குப் போய் இன்னவாறு செய்தன என்று புனைந்துரைக்கும் வகையெல்லாம் இதன்பால் அடங்கின என்று விளக்கியுள்ளார். தொல்காப்பியர் எண்வகை வனப்புகளைக் குறிப்பிடும்போது தொன்மைக் கதையைக் கூறுவதை உணரலாம். இதனை,

*“தொன்மை தானே உரையொடு புணர்ந்த*
*பழமை மேற்றே” (தொல்.செய்.538)*

என்ற நூற்பாவில் தொன்மையான தொன்மத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். தொன்மக் கதைகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை,

1.உலக விளக்கக் கதைகள்
2.விலங்குக் கதைகள் (Animal myth)
3.வீரநிலை புராணக்கதை (Aeroic Myth)

என்பன. இவைகளில் உலகவிளக்கக் கதைகள் என்பது உலகத்தின் தோற்றங்களைப் பற்றிய கதை, விலங்குக் கதைகள் என்பது விலங்குகளைக் கதாபாத்திரமாகக் கூறும் கதை. மேலும், வீரநிலை புராணக்கதை என்பது வீரயுகத்தில் வாழ்ந்த மனிதர்களின் வீரச் செயல்களைக் கூறுவது என்பனவாகும்.

**நாட்டுப்புறக் கதைகள்**
நாட்டுப்புறக் கதைகளைப் பொதுவாக
1.மனிதக் கதைகள் (Human Stories)
2.மிருகக் கதைகள் (Animal Stories)
3.மந்திரக் கதைகள் (magic Stories)
4.தெய்வக் கதைகள் (God’s Stories)
என்னும் வகைளில் பாகுபடுத்துவர்.

**மனிதக் கதைகள்**
மனிதர்கள், மனித உணர்வுகள் பற்றிய கதைகள், மனிதக் கதைகளின் பாற்படும். அரசர்களைப் பற்றிய கதைகளும் இதில் அடங்கும். காதல், உல்லாசம், நீதி, பயணம், நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், இடம்பெயர்தல் போன்றன மையப் பொருளாகக் கொண்டும் அமையும். இவைப்போல இன்னப்பிற செய்திகளும் அமையும் எனலாம்.

**மிருகக் கதைகள்**
மிருகங்களைப் பற்றி கதைகளை மிருகக் கதைகள் என்பர். சில கதைகளில் மிருகங்கள் பேசுவதாகவே கூறப்பட்டிருக்கும். மனிதர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை மிருகங்கள் மீது ஏற்றிக் கூறுவர். நடைமுறையில் கூட தான் சொல்ல வேண்டிய கருத்துக்களை மற்றவர்கள் கூறுகின்றார்கள் என்னும் அளவிற்கு விடைகூறுவதாக அமைகிறது.

**மந்திரக் கதைகள்**
மந்திர தந்திரங்களைப் பற்றிய கதைகளே மந்திரக் கதைகளாகும். இக்கதைகளில் மந்திரவாதிக்கு முக்கிய இடம் உண்டு. பேய், பிசாசுக் கதைகளும் இவற்றில் அடங்கும். மனிதஇன வரலாற்றில் பழங்கால மனிதன் இயற்கையை வெல்ல, மந்திரத் தந்திரங்களை உண்டாக்கினான். அக்காலக் கட்டத்தில் இத்தகைய கதைகள் தோற்றம் பெற்றன எனலாம். மக்கள் தாம்கூற விரும்பும் கருத்துக்களை மனிதசக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றின் மீது ஏற்றிக் கூறுவதைக் காணலாம். இக்கதைகளின் மூலம் மக்களின் பழங்கால எண்ணங்கள் வெளிப்படுகின்றன.

**தெய்வக்கதைகள்**
நாட்டுப்புற மக்கள் பேரச்சத்துடன் முதலில், இடி, மின்னல், நெருப்பு, பாம்பு போன்றவற்றை வழிபட்டு வந்தனர். பின்னர் இம்மக்கள் சிறுசிறு தெய்வங்களை அச்சத்தோடு வணங்கி வந்தனர். அவற்றை வணங்குவதற்குரிய காரணத்தையும் வணங்காவிடில் ஏற்படும் தீங்குகளையும் கதைகளாக மக்களிடையே சொல்லி வழிபாட்டுணர்வை ஏற்படுத்தினர். அச்சத்தின் காரணமாகவே இவை எழுந்தன. சுடலைத்தெய்வம் என்றும், மயானத் தெய்வம் என்றும், மாடன் தெய்வத்தை ‘அஞ்சாத தெய்வம்’ என்பதும் கருதப்பட்டு வருகிறது. ‘நீலி’ எனப்படும் இசக்கியம்மனும் அவ்வாறே கொடுமை செய்யும் தெய்வம் என நாட்டுப்புற மக்களால் கருதப்பட்டு வணங்கப்படுகிறது.

கருவூர் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டபோது, மேலே சொல்லப்பட்ட கதைகளின வகைகளை நோக்கும் போது மனிதக் கதைகள், தெய்வக் கதைகளின் வாயிலாக இடப்பெயர்ச்சி நிகழ்ந்துள்ளதை வாய்மொழிக் கதைகளின் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், பல்வேறு கிராமங்களில் இடம் பெயர்ந்து வந்துள்ளதை தரவுகளின் அடிப்படையிலும், நாட்டுப்புறக் கதைக்கூறுகளின் அடிப்படையிலும் உணர முடிகிறது.

**மகண் மறுத்தலும் இடம் பெயர்தலும்**
மனித வாழ்வில் இனத்தூய்மை இன்றியமையாத பண்பாடாக பன்னெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் பிறிதோர் இனத்தைச் சார்ந்தவருடன் மணஉறவு வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. அவ்வாறு மணஉறவு வைத்துக் கொள்வது தம் குலத்திற்கு இழுக்கு எனக் கருதுகின்றனர். அரசனுக்கும், ஆண்டிகளுக்கும் பெண் கொடுக்க மறுத்த பல வாய்மொழிக் கதைகள் வழக்கிலுள்ளன. இனம் மாறி தங்களுடைய மகளை திருமணம் செய்து கொடுக்க மறுத்ததை அறியமுடிகிறது.

**இலக்கிய இலக்கணச் சான்றுகள்**
நாட்டுப்புற வழக்காறுகளின் மகண் மறுத்தல் செய்தி தொல்காப்பியர் காலந்தொட்டே மக்களின் வாழ்வுடன் பின்னிக் கிடந்ததைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் உறுதிப்படுத்தும் ஆவணங்களாகத் திகழ்கின்றன. சான்றாகத் தொல்காப்பியப் புறத்திணையியலில் காஞ்சித் திணையின் துறையில் இடம்பெறுவதை,

*"நிகர்த்து மேல்வந்த முதுகுடி*
*மகட்பாடு அஞ்சிய மகட்பாலும்"*

என்ற நூற்பா வாயிலாக மன்னர்கள் பெண்கேட்டு முரண்பாடு கொண்டதை வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பிய அகத்திணை இயலில் காதலர்கள், பெற்றோர் பெண்தர மறுத்தபோது உடன்போக்கு மேற்கொண்டமை காணக்கிடைக்கின்றது. சான்றாக,

*"தன்னும் அவனும் அவளும் சுட்டி,*
*மன்னுநிமித்தம், மொழிப் பொருள் தெய்வம்*
*நன்மை தீமை அச்சம் சார்தல் என்று*
*அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ*
*முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்*
*தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்*
*போதிய துறந்து நற்றாய் புலம்பலும்*
*ஆகிய கிளவியும் அவ்வழி உரிய"*

என்ற நூற்பா வழி உடன்போக்கு நிகழ்விற்குக் காரணம் தலைவனுக்கு தலைவியைப் பெற்றோர்கள் திருமணம் செய்து கொடுக்காததே என்பர். மேலும், சங்க இலக்கியமான புறநானூற்றில் மகண்மறுத்தல் பற்றிய செய்திகள் விரவிக் காணப்படுகின்றன. சான்றாக,பாரியின் மகளிர் இருவரையும் பெண்கேட்டு வந்தனர் முடியுடை மன்னர். அவன்தர மறுத்ததால், அவமானம் கொண்டனர். அதனால், அவர் ஒவ்வொருவராக வந்து போரிட்டுத் தோற்றனர். அதைக் கண்ட கபிலர் அம்மன்னர்களைப் பார்த்து 'நீவிர் மூவரும் படையுடன் போரிட முயன்றால் பாரியை வெல்ல இயலாது. இரவலராக வந்து இரந்து கேட்டால் தன்நாட்டையும் மலையையும் தந்து விடுவான் என உரைப்பதை,

*"மீன்கண் அற்றுஅதன் சுனையே ஆங்கு*
*மரம்தொறும் பிணித்த களிற்றினர் ஆயினும்*
*புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்*
*தாளின் கொள்ளலிர் வாளின் தாரவன்"*
***(புறம்.109.10-13)***

என்னும் பாடலடிகளின் வழியாக உரைப்பதைக் காணலாம். அதாவது பறம்பு மலை பெற்றால் பாரி மகளிரையும் பெறலாம் என்றும், இல்லை என்றால் பாரிமகளிரைப் பெற முடியாது என்பதைக் கூறுவதாகக் கபிலர் உரைக்கிறார். மேலும், புறநானூற்றுப் பாடல்களான 110, 111 தெளிவாக மகண்மறுத்தல் பற்றித் தெளிவுபடுத்துகிறது.

சூடாமணிப்புலவர் எழுதிய வைசியபுராணம் மகண்மறுத்தல் குறித்த செய்தியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அதாவது,''மருதவாணன் என்ற வாணிகனின் மகளைப் பலவந்தமாக மணக்கச் சோழமன்னன் ஒருவன் முடிவுசெய்து திருமணப்பந்தல் போட உத்திரவிட்டான். திருமணநாளுக்கு முந்தின நாளிரவில் 'எம்வீட்டுப் பெண் நாய்க்கும் நீ தகுந்தவனல்லன்' என்பது விளங்க ஒரு ஆண் நாயைக் கட்டிவிட்டு மருதவாணன் ஓடிவிட்டான்''6 இச்செய்தியின் மூலம் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திய மேல்வர்க்கத்தினர் தங்களுடைய பாலியல் வேட்கையினைத் தீர்க்கக் கீழ்நிலையிலுள்ளவர்களின் பெண்களைத் தகாத முறையில் அடையப் பெற்றிருப்பதும் அதன் எதிர்வினைகளும் புலனாகின்றன.

**சமூகநிலை**

இன்றைய சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. சமநிலையற்ற சமூகத்தில் மேல்நிலை வர்க்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்களை அடிமைகளாக எண்ணுகின்றன. இச்சூழலில் அடித்தள மக்களின் வீட்டுப்பெண் அழகுடையவளாய் இருந்தால் மேல்தட்டு மக்கள் தங்களுடைய மேலாண்மையைப் பயன்படுத்தி அவளை அடைய முற்படுகின்றனர். அந்நிலையில் ''மேல்வர்க்கத்தை எதிர்க்கும் திராணியற்ற அடித்தள மக்கள் தங்கள் குலமானம் காக்கப் பெண்ணைக் கொன்றுவிடுகின்றனர் அல்லது அந்தப் பெண்ணே தன் கற்பைக் காக்கத் தற்கொலை புரிந்து கொள்கிறாள். இம் மறைமுக எதிர்ப்பு நிலையையே மகண்மறுத்தல் அல்லது மகள்மறுத்தல் என்கிறார்''

**இடப்பெயர்ச்சிக் கதை**
**கந்தசாமி வன்னியன் கதை**

கந்தசாமி வன்னியன் கொங்குநாட்டு 'பெரியபாளையம்' என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். இவர் கவுண்டர் குலத்தைச் சார்ந்த ஜக்கம்மா என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்க இருவீட்டார் எதிர்ப்பு இருந்த போதும், தன்னுடைய வீரத்தன்மையால் சமாளித்தார். ஒருநாள் இரவில் வன்னியர் குலத்தைச் சார்ந்த சில ரவுடிகள் கந்தசாமியைக் கொல்வதற்குக் கதவின் வழியாக ஈட்டியை எறிந்தார்கள். ஈட்டி அவர் தலையில் வைத்திருந்த தலையணையில் பட்டது. மறுநாள் காலையில் வீட்டையும் பொருள்களையும் விட்டுவிட்டு தன்னுடைய மனைவி ஜக்கம்மாவையும் உறவினர்களையும் கூட்டிக்கொண்டு கருவூரில் குடியேறினார். வன்னியர் மக்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளதை கள ஆய்வு அடிப்படையில் தரவுகள் அமைந்துள்ளது.

**2.அறுத்துக் கெட்டாக் கதை**

கொங்கு நாட்டில் உள்ள ஒரு ஊரிலே ஒரு குறுநில மன்னர் வாழ்ந்தார். இவர் நன்றாக ஆட்சி செய்து வந்தார். அப்பகுதியில் வாழ்ந்த கவுண்டர்கள் ஆடு, மாடு, மேய்த்தலைத் தவிர வயல் வேலையும் செய்து வந்தனர். வயலினைக் குத்தகைக்கு எடுத்திருந்தனர். ஒருநாள் கவுண்டர் இன மக்கள் வயலில் அறுவடை செய்து கொண்டிருந்த போது மன்னர் வயல் அருகே வந்து,

அதைப்பார்த்துக் கொண்டிருந்தார். அவ்வயலில் ஒரு அழகான விதவைப் பெண் அறுவடை தொழிலில் ஈடுபட்டிருந்தாள். மன்னர் விதவைப் பெண்ணைத் தனக்கு திருமணம் செய்து தருமாறு கேட்டார். அதற்கு அம்மக்கள் மறுத்தனர். மேலும், நாங்கள் 'அறுத்தா கெட்டமாட்டோம்' என்றனர். மறுநாள் கவுண்டர் மக்கள் அறுவடை செய்து கொண்டிருந்த போது, நீங்கள் அறுத்தா கட்டமாட்டீர்களே, வயல் அறுத்தைதக் கட்டவேண்டாம் என்று மன்னர் உத்தரவு பிறப்பித்தார். எனவே கவுண்டர் மக்கள் தொழில் செய்ய முடியாமல் கருவூரின் பலபகுதிகளில் இடம் பெயர்ந்தனர்.

**3.வீரம்மாக் கதை**

கருவூர் பக்கத்தில் 'கொடுமுடி' எனும் ஊர் இருந்தது. இந்த ஊரிலே மண்பாண்டம் செய்யும் குலாலர் சமுதாயத்தைச் சார்ந்த 'குலாலச்சி' வாழ்ந்து வந்தாள். வன்னியர் சமூகத்தைச் சார்ந்த சின்னத்தம்பி, அழகப்பன் என்ற இருவரையும் வளர்த்து வந்தாள். குலாலச்சிப்பெண் சின்னத்தம்பி, அழகப்பன் இருவரையும் இதே ஊரில் உள்ள குலாலன் வீட்டில் வேலைக்கு அனுப்பி வைத்தாள். குலாலன் மண்பாண்டங்களைச் செய்து வந்தார். இவருக்கு வீரம்மை என்ற மகள் இருந்தாள். வீட்டுவேலைக்குச் சென்ற சின்னத்தம்பிக்கும், வீரம்மைக்கும் காதல் ஏற்பட்டது. இதனையறிந்த வீரம்மையின் தந்தையும், உறவினர்களும் சேர்ந்து சின்னத்தம்பியை அமராவதி ஆற்றில் வெட்டிக் கொன்றனர். அண்ணனைக் காணாத அழகப்பன், அண்ணன் வெட்டுண்ட செய்தியை அறிந்து தற்கொலை செய்து கொண்டான். வீரம்மையின் தந்தை வீட்டில் வீரம்மையைக் கொன்றார். சாகும் நிலையில் இருந்த வீரம்மை சாபம் இட்டு உயிர்த்துறந்தார். சின்னத்தம்பி வீரம்மை இறந்தபிறகு ஊரில் கெடுதல் நேரவே மக்கள் வேறு ஊர்களுக்குக் குடியேறினர். அதாவது கருவூரில் உள்ள ஊர்களில் இடம் பெயர்ந்தனர்.

**4.முனியப்பன் ஐயனார் கதை**

புகழூரைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ஆடு மேய்ப்பதற்காக திண்டுக்கல் பகுதியில் உள்ள அரவக் குறிச்சிக்குச் சென்றார்கள். இவ்வூர் பக்கம் வாழத்தி வயல் உள்ளது. இந்த வயலின் அருகே மாடன் கோவிலுக்கு நேர்ந்து விட்ட வாழைக் குலையினை வெட்டி வீட்டிற்குக் கொண்டு வந்தனர். வீட்டிற்கு வந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துன்பம் நேர்ந்தது. ஆடு, மாடுகள் நோயால் இறந்தன. இதனை உணர்ந்த இவ்வினமக்கள் சோதிடரிடம்,ஜோதிடம் கேட்டார்கள். ஜோதிடம் நீங்கள் சாமிக்குக் கெடுதல் செய்தீர்கள் என்று கூறினார். இதனை உணர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வாழத்தி வயலில் அமைந்துள்ள முனியப்பன் அய்யனார் கோவிலில் வென்று பிடிமண் எடுத்து புகழூரில் கோயில் அமைத்தனர். இக்கோவிலுக்கு ஒரு வருடத்திற்கு ஒருமுறை 'கிடாவெட்டி' வழிபாடு செய்வர். இதன்பிறகு மீண்டும் இம்மக்களுக்கு துன்பம் ஏற்பட இவ்வூரினை விட்டு கருவூரில் உள்ள பல வட்டாரங்களுக்க இடம்பெயர்ந்தனர்.

**5.மாடன் தம்பிரான் கதை**

காக்காபாளையத்தில் இருந்து வெள்ளசாமிக் கவுண்டரும், கந்தசாமிக் கவுண்டரும் ஆடு, மாடு வாங்குவதற்கு சேலத்திற்குச் சென்றனர். சேலத்தில் நல்ல மாடு கிடைத்தால் அங்கு அமைந்துள்ள மாடன் தம்பிரான் கோவிலுக்கு ஒரு ரூபாய் காணிக்கை செலுத்துவது வழக்கம். அதுவே வெள்ளசாமி கவுண்டரும் ஒரு ரூபாய் மாடன்தம்பிரான் கோவிலுக்குக் காணிக்கை செலுத்தக் கூறினார். கந்தசாமி கவுண்டர் காணிக்கையைச் செலுத்தாமல் செலுத்தியதாக பொய் கூறினார். மாடு பிடிச்சுக்கிட்டு வீட்டிற்க வரும் வழியில் மாடு இரத்தம் வாந்தி பேதி வயிற்றுப்போக்கு ஏற்பட்டு இறந்தது. இருவரும் வீட்டிற்க வந்த போது வீட்டில் துன்பம் ஆரம்பித்தது. கந்தசாமிக் கவுண்டர் ஜோதிடரிடம் குறிகேட்ட போது, நீங்கள் மாடன்தம்பிரான் கோவிலுக்குக் காணிக்கையைச் செலுத்தவில்லை என்று கூறினார். சேலத்தில் இருந்து பிடிமண் கொண்டுவந்து காக்கா பாளையத்தில் மாடன் தம்புரான் கோவில் கட்டி வழிபாடு செய்தனர். இதன்பின்பு துன்பம் தீர்ந்தது.

மேலே கூறப்பட்ட இடப்பெயர்ச்சி கதைகளில் சமூகப் பின்புலம் சில செய்திகளைக் காணலாம். அவை

1.சாதிய முரண்பாடுகள் - இடம்பெயர்தல்

2.ஆளும் வர்க்கத்தின் சமூகநிலை - இடம் பெயர்தல்

3.சாதிய முரண்பாடும் காதலுக்க எதிர்ப்பும் சாபம் இடுதல் - இடம்பெயர்தல்

4.இறைநம்பிக்கைக்குக் கெடுதல் - இடம் பெயர்தல்

5.பொய்க்கூறுதல் துன்பம் ஏற்படுதல் - இடம் பெயர்தல்

**முடிவுரை**

இன்றைய உலகில் வாய்மொழிக் கதைகள் ஏராளம் கிடைக்கின்றன. அதைப் போல கரூரில் களஆய்வு மேற்கொண்ட பிறகு ஏராளமான நாட்டுப்புறக் கதைகளும், அதனால் இடம் பெயர்ந்த நிகழ்வுகளும் கிடைக்கின்றன. மேலும், இக்கதைகளை மீட்டுருவாக்கம் செய்யும்போது ஆளும் வர்க்கத்தின் முரண்பாட்டினையும், மகண் மறுத்தல் நிகழ்வு நாட்டுப்புறமக்களிடம் இடம் பெற்றுள்ளதையும் சாதிய தாக்கங்களும் உணர்த்துவதை உணர முடிகிறது.

# காவல் கோட்டம் "நாவலில் இனவரைவியல் செய்திகள்"

**ப.லோகாம்பாள்**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கே.எஸ்.ஆர். மகளிர் கலைஅறிவியல் கல்லூரி*
*திருச்செங்கோடு– 637 215.*

மனிதத் தோற்றம் குறித்து அறிவியலும் புனைகதைகளும் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடுகின்றன. எவ்வாறாயினும் மனிதனின் தோற்றத்தை அறிய பலரும் முயன்றுள்ளனர். அதே போல் ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒருகுலப்பிரிவை, சாதிப்பிரிவை, சில சடங்கு முறைகளைப் பின்பற்றுகிறான். ஒவ்வொரு பிரிவினருடைய சடங்கு முறையிலும் சிலமாற்றங்களைக் காணமுடிகிறது. இச்சடங்கு முறைகள் குறிப்பிட்ட இன மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது. மனித இனம் உயிரினங்கள் அனைத்திலும் உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது. மனிதன் மற்ற உயிர்களிடமிருந்து வேறுபட முக்கியக் காரணமாக விளங்குவது ஆறாவது அறிவு ஆகும். ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒருஅடையாளம் காணமுயன்றான். அதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் தன் தொழில், பழக்கவழக்கம் இவற்றைக் கொண்டு பலபிரிவுகளாகப் பிரிந்தனர். இவ்வாறு பலபிரிவுகளாகப் பிரிந்த மனித இனவரைவியல் பற்றியும் அவர்களின் வாழ்வியல் செய்திகளையும் "காவல் கோட்டம்"நாவலின் வழியாகஆராயப்படுகிறது.

**ஜக்குநாயக்கர் இனம்**

காவல் கோட்டம் நாவலில் ஜக்கு இனம் பற்றிய செய்தி காணப்படுகிறது. அதாவது நாயக்கர் இன மக்களின ஒருபிரிவினர். ஜக்குநாயக்கர்கள் அணிகுத்திட கோட்டையிலிருந்து தங்கள் உறவினர்களோடு வந்து மேற்கு மலைகளின் கீழ் கோட்டைகட்டிக் கொண்டு காடுகளை வெட்டி ஊராக்கினர். அவர்களுக்குத் தேவையானது மேய்ச்சல் நிலம் என்பதால் தாங்கள் உணவுத் தேவைக்காக விளை நிலங்களை ஏற்படுத்தி பயிரிட்டனர் என்னும் செய்திகளின் வாயிலாக அவர்களின் இன அடையாளமும் தொழில் சார்ந்த நிலைகளையும் வெளிப்படுத்துகின்றது.

**ஒக்கிலியர்களின் இனம்**

ஒக்கிலியர்கள் இனம் பற்றிய செய்திகள் காவல் கோட்டம் நாவலில் காணப்படுகின்றன. ஒக்கிலியர்கள் ஆதியில் வடுகர்களாக இருந்தவர்கள் என்றும், முன்னொரு காலத்தில் காப்புகள் ஸ்ரீசையத்தை இழந்து வடக்கே போனபோது அதில் ஒருபிரிவினர் மேற்கே வந்து கலந்துவிட்டனர் என்றும் கூறுவர். இவர்கள் திண்டுக்கல் வட்டத்தில் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் விவசாயம் செய்வதில் திறமையானவர்கள் என்பதை "காவல் கோட்டம்" நாவல் தெளிவுபடுத்துகிறது.

**உப்பலவாறு இனம்**

உப்பலவாறு என்ற இனம் பற்றிய நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. இவ்வின மக்கள் கிணறு தோண்டுவதையும் கல் உடைப்பதையும் பாரம்பரியமாகச் செய்து வருபவர்கள் என்றும் அவர்கள் மதுரைக்கு வந்தபோது முதல் இரண்டு மூன்று நாட்களாகச் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் கிணறு, குளம், குட்டைகளை நோட்டம் பார்த்து வைகையின் தென்கரையிலிருந்து வடக்கு மதிலுக்குக் கீழே கோட்டைக்குள் போகும் ஊற்று மடைகளை அடைத்து கோட்டைக்குச் செல்வதற்கான மறைமுகமான வழிகளைத் தயார் செய்து கொடுத்தனர் என்பதை நாவல் படம் பிடித்துக் காட்டுகின்றது.

**பாலமு இனம்**

பாலமு இனம் பரம்பரை பரம்பரையாக முதுகல் மண்டலத்தில் கோவுதானபுரம் பாளையக்காரர்கள் கொட்டியம் படையில் சேவகம் செய்கிறவர்கள் ஆவார். ஆனைக்குந்தி ராஜ்ஜியம் இருந்தகாலத்திலிருந்தே அந்தப்பாளையம் இருந்தது. அந்த வமிசமும் பாளையவீரர்களும், அதையெல்லாம் கொடுத்துவிட்டு விஸ்வநாதனுக்காக ஆயிரம் காததூரம் சென்று குடியேறியவர்கள் இவர்கள் ரத்னகிரி போரில் விஸ்வநாதன் உயிரைக் காப்பாற்றினார்கள். அதற்காக நாகமர், முத்தையாவுக்கு ஏராளமான பரிசுகளையும் ''பாலமகட்டாரி'' என்ற விருதையும் மற்று ஐந்து ஊர்களையும் தானமாகக் கொடுத்த செய்தியும் இடம்பெற்றுள்ளது.

**வெக்கிலியர் இனம்**

தமிழகத்தில் இருந்த இனத்தினருள் வெக்கிலியர் இனமும் ஒன்று. வெக்கிலியர் இனத்தில் மூன்று பிரிவினர்கள் அதிகாரவர்க்கத்தினர். அவர்கள் மேட்டுநாயக்கர், கொட்டியம் நாயக்கர், கோடாங்கி நாயக்கர், ஆவர். முதல் இரண்டு பிரிவினரும் அவர்கள் இனத்தில் தலைமை வகிப்பவர்கள். மேட்டுநாயக்கருக்குக் குலக்கட்டுப்பாடு, நிர்வாகப் பொறுப்புகள் போன்றவை இவர்களைச் சார்ந்தவையாகும். கோடாங்கி நாயக்கர் வழிபாடு சடங்குமுறைகளுக்குப் பொறுப்பு ஏற்று செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

**பரங்கியர் இனம்**

பரங்கியர் இனம் வெளிநாட்டவர்கள். இவர்கள் பரமக்குடிபோரில் தும்பிச்சிக்கு உதவிசெய்ய போர்க்களம் வந்தவர்கள். அதில் தும்பிச்சி பிடிபடும்போது அவர்களுடைய துப்பாக்கிகள் நாயக்கர் கைவசம் வந்தன. மீண்டும் இலங்கைபோரில் கண்டிஅரசன் சில பரங்கியர்களை அணித்தலைவர்களாக்கி போருக்குத் தயார்படுத்தினான். அவர்களும் இலங்கைப் போரில் போர்க்களத்தில் முன்னிலையில் இருந்து துப்பாக்கி சூடு நடத்தி வெற்றிகண்டதை அறியமுடிகிறது.

**சக்கிலியர் இனம்**

மதுரைபடைவீரர்களாகச் சக்கிலியர்களின் கோசாங்கியர் அணிகள் பெதவீரலுவெங்கடாத்திரி தலைமையில் நின்றன. ஆறாயிரம் குதிரைகளுக்கு ரம்பாவுலகேசவன் தலைமைப் பொறுப்பு ஏற்று இருந்தான். இவர்கள் பிரிவில் யானைகள் எதுவும் இல்லை. இவர்களிடத்து பசுவும் இல்லை. இவர்கள் ஆதியில் பசுக்களை அடித்துத் தின்றதால் பசுக்கள் வளர்க்க அனுமதி இல்லாமல் போயிருந்தது. போர்க்களச் சடங்குகளில் இவர்களுக்கு முதல்மரியாதை இருந்தாலும், கம்பளத்தில் மரியாதை இல்லை என்ற செய்தியும் நாவல் சுட்டிக்காட்டுகின்றது.

**கள்ளர் இனம்**

கள்ளர்களின் முதல் ஆயுதமேகல்தான். களவு செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தியதால் கள்ளர் இனம் எனப்பட்டனர். இவர்கள் கல் எறிந்தால் பனங்காய் விழும். அந்த அளவிற்குகல் எறிவதில் பயிற்சி உடையவர்கள். சிறுவர்கள் தங்கள் தாயைவிட்டு விலகி வெளியே விளையாட வரும்போது முதல் பழக்கமே கல்லோடுதான். இவர்கள் போர்க்களத்தில் வளரி எறிவதில் சிறந்தவர்கள். ஒருமுறை வல்லம் பிஜப்பூர் படை முற்றுகையிட்டபோது தஞ்சாவூர் கள்ளர்கள் படைமுகாமை தினமும் விடாது கொள்ளையடித்தே முற்றுகையை கலைத்துவிட்டனர் என்பதை நாவல் வாயிலாக உணர்ந்து கொள்ளலாம்.

**பரதவர் இனம்**

சங்க இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் பரதவர் இனம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. காயல் பட்டினம் மரைக்காயர்கள் பரதவர்களோடு கடலில் தொடர்ந்து மோதிக்கொண்டே இருந்ததால் அவர்கள் கடலில் பரங்கியர் மூலம் பாதுகாப்பைத் தேடிக்கொண்டனர். அதற்காகவே அவர்கள் வேதத்தில் சேர்ந்துவிட்டனர். கடலில் முத்துக்குளி வேலையில் ஈடுபடுபவர்கள் தான் பரதவர் இனம் ஆகும்.

**குலப்பாடகர் இனம்**

குலப்பாடகர்கள் போருக்குச் செல்லும்போது கூடவே செல்லவேண்டும். போருக்குமுன் பாடவேண்டும். களத்தில் இறப்பவர்களை அடக்கம் செய்கையில் பாடவேண்டும். பாளையத் தலைவர் வம்சத்திற்கு மட்டுமல்லாது எல்லாவீடுகளுக்கும் தனித்தனியே பாடகர்கள் உண்டு. ஒருபாளையத்தில் உள்ள படைவீரர்கள்

அநேகமாகப் பத்துவீட்டுக்குப் பாடுவர். அவர்கள் சந்ததியினர் எவ்வளவுகிளைகளாகப் பிரிந்தாலும் வீட்டுப் பெயர் ஒன்றேதான். அதுவே பாரம்பரியமாகத் தொடரும். குலப்பாடகளின் தொழிலே களங்களிலும், மாலைக்கல் வழிபாட்டிலும், விழாச்சடங்குகளிலும் வீட்டுப் புகழ் பாடுவதுதான். பாடல்கள் குலப்பாடகரின் சந்ததிகள் வழியாகத் தொடர்ந்து கொண்டே இருக்கும். வாரிசு அற்ற நிலை வருமென்றால் உறவினர்களுக்குப் பாடல்களைச் சொல்லிக் கொடுத்து உரிமையைக் கைமாற்றி விடுவதையும் தெளிவுப்படுத்திக் கூறியுள்ளதை அறியமுடிகிறது.

பழங்குடியினர் முதல் தமக்கென ஒருநாகரீகத்தைக் கொண்டிருக்கும் பல்வேறு சாதிக் குழுவினர்வரை அனைவரிடமும் காணக்கூடியதாகும் என்பர். இறப்புச் சடங்குகளை மூன்று வகையாகப் பிரிப்பர். அதாவது,

1.இறந்த அன்று செய்யும் சடங்குகள்
2.சுடுகாட்டில் செய்யும் சடங்குகள்
3.எரியூட்டிய பின் செய்யும் சடங்குகள் என்பன.

மேலும், அவரவர் குலப்பிரிவுக்குத் தகுந்தமாதிரி ஒருகுறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு வீடுகளைச் சுத்தம் செய்து வெள்ளைஅடித்து தீட்டினைக் கழிப்பர்.

"காவல் கோட்டம்" நாவலில் ஹசன் அலிகான் என்ற பாமினித் தளபதி வேட்டைக்கு, விஜயநகர ஊர்களின் வழியாகச் செல்லும் போது, அங்கு கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த ஒரு கம்மாளப் பெண்ணை சிறை எடுத்துச் சென்றுவிட்டான். அவன் சிறையெடுத்த பெண்ணை அவனிடம் போர் தொடுத்து மீட்டுக் கொண்டு வந்தனர். இவ்வாறு மீட்டு வந்த கம்மாளப் பெண்ணை அவர்கள் தீட்டுக்கழித்து ஏற்றுக் கொண்டனர் என்றும் செய்தியும் கிடைக்கின்றன.

**முடிவுரை**

நீரில் இருந்து உயிரினங்கள் தோன்றின. அந்த உயிரினங்களில் பரிணாம மாற்றம் ஏற்பட்டு குரங்கில் இருந்து மனிதன் பிறந்தான். அவ்வாறு பிறந்த மனிதன் பலபிரிவாகப் பிரிந்து தங்களுக்கு எனப்பல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தனர். அவ்வாறு அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட வாழ்வியலில் இன வரைவியல் முக்கியத்துவம் பெறுகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1.சு.வெங்கடேசன்,"காவல் கோட்டம்",தமிழினி பதிப்பகம், சென்னை.
2.நா.இராமையா பிள்ளை, புறநானூறு, பா.235.

# கொங்கு வேளாளர்கள் பயன்படுத்தும் பொருள்களும் உணவுமுறைகளும்

**N. மணிமேகலை**
*முனைவர்பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்)*
*தமிழ்த்துறை*
*அறிஞர் அண்ணா அரசு கல்லூரி*
*நாமக்கல்*

### முன்னுரை

அறம், பொருள், இன்பம் மூன்றையும் முழுமையாக அனுபவித்தால் வீடுபேறு தானாகக் கிடைக்கும். மனிதன் தோன்றிய காலகட்டத்தில் இன்பத்தை அனுபவித்த பிறகு பொருளை உருவாக்கி நாகரீக வளர்ச்சியின் விளைவால் பொய்யும் வழுவும் தோன்றி அவற்றிற்கு மனிதனே சில ஒழுங்க முறைகளை வகுத்துக் கொண்டான். அந்த ஒழுங்கு முறையே அறமாகி, அறத்தின் வாயிலாக பொருளும் இன்பமும் கிட்ட வேண்டும் என்ற வாழ்வியல் கோட்பாடுகள் உருவாகியிருக்க வேண்டும். கொங்க வேளாளர்களும் குழுக்களாக சேர்ந்து வாழ்க்கை நடத்தி சில வழக்கங்களையும் வாழ்வியல் நெறிகளையும் பேணி வந்துள்ளனர். இவற்றை ஆராய்வது இவ்வியலின் சிறப்பாகும்.

### வாழ்வியல் இலக்கணம்

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவனே வகுத்துக் கொண்ட நெறிமுறை வாழ்வியல் இலக்கணமாகும்.

''அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே''[1] என்றும்

''உரத்தின் வளம் பெருக்கிஉள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு''[2]

என்ற நன்னூல் சூத்திரத்தின் மூலம் நன்கு விளங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சமுதாயம்

சமுதாயம் என்பது மக்கள் கூடிவாழும் அமைப்பாகும். இதில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவரும் சமமாகக் கருதப்படவேண்டும். சமுதாயம் என்ற சொல்லின் பிறப்பு குறித்து அறிஞர் நா.செயப்பிரகாசம் ''தோழமை என்னும் பொருள் கொண்ட இலத்தீன் சொல்லான 'சோஷியல்' என்பதிலிருந்து சமுதாயம் என்ற சொல் பிறந்ததாகச் சொல்வர்''[3] என்று குறிப்பிடுகிறார்.

சமுதாயம் என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி ''மக்களின் திரள்''[4] என்னும் பொருளையும் தருகின்றது. வாழ்வியற் களஞ்சியம் ஆகும். அதாவது ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றி கூட்டமாக வாழும் மக்களின் தொகுதி சமுதாயம்''[5] என்று விளக்கமும் தருகின்றன. ''சமுதாயம் என்ற சொல் சமழ்தாயம்ஸ்ரீ சமுதாயம்''[6] அதாவது தாயம் என்பது உரிமை என்ற பொருளைத் தரும். இவ்வாறாகச் சமுதாயம் என்பதன் சொல் விளக்கத்தை அறிய முடிகிறது.

வேளாளர் சமுதாயம் பேணிய வாழ்க்கை நெறிமுறைகள் கால மாறுதல்களால் கைவிட வேண்டிய சூழல்களும் உருவாகும். அவ்வாறு ஏற்படும் சமுதாயச் சிக்கல்களை நீக்கி, சமுதாய முன்னேற்றத்திற்கு உதவுவது பண்பாடு ஆகும்.

### பண்பாடு – விளக்கம்

பண்பாடு என்பது பண், படு என்ற சொற்களின் கூட்டுச்சொல் எனலாம். 'பண்படு'என்ற வினையிலிருந்து என்ற பெயர் உருவாயிற்று. மேடு பள்ளங்களாய் கிடக்கும் நிலம் சமநிலையை அடையும்போது நிலம் பண்பட்டதென்றும், மனம் பக்குவநிலையை அடையும்போது மனம் பண்பட்டதென்றும் கூறுவதை அறியலாம். இத்தகைய பண்பட்ட மனமே பண்பாட்டைக் குறிக்கும். "முரண்பாடுகளையும், மோதல்களையும், அழிவுகளையும் தவிர்த்து சமுதாயத்தில் ஓர் இசைவு நிலையை உண்டாக்கி உண்மையான அமைதிக்கு அடித்தளமாக இருப்பது பண்பாடு"7 என்று பொன்.கோதண்டராமன் கூறுகிறார்.

பண்பாடு பல கூறுகளை உள்ளடக்கிய முழுமையானத் தொகுதியாகும். இதனைப் "பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்"8 என்பார் சீ.பக்தவத்சலபாரதி அவர்கள். பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் மக்கள் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கிறது. கொங்க வேளாளர்களிடம் நாகரிகம், பண்பாடு மிக்கவர்களாக உள்ளனர்.

### பண்பாடு

பண்பாட்டினை இரண்டு நிலைகளில் வகைப்படுத்தலாம். அவை,

1.பொருள்சார் பண்பாடு

2.பொருள்சாராப் பண்பாடு என்பதாகும்.

### பொருள்சார் பண்பாடு

மக்கள் தேவைகளுக்காக உற்பத்தி செய்து கொள்ளப்படும் அல்லது உருவாக்கிக் கொள்ளப்படும் பொருள்கள் சிலவற்றைக் கலை வடிவங்கள் என மானிடவியலாளர் கூறுகின்றனர். ஆடைகள், அணிகலன்கள், மனைப்பொருட்கள் இருப்பிடங்கள், தொழிற்பொருட்கள், வாகனங்கள், தொடர்பு சாதனங்கள் என்பன பொருள்சார் பண்பாடு எனலாம்.

### பொருள்சாராப் பண்பாடு

பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் பொருள்சாராப் பண்பாடாகும். இந்தப் பண்பாடு மனத்தளவில் மட்டுமே உணரக்கூடியதும், புரிந்து கொள்ளக் கூடியதும் ஆகும். இதனை மனவடிவங்கள் என மானிடவியலாளர் கூறுகின்றனர். பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சகுனங்கள், சடங்குகள், வழிபாடுகள் போன்றவைப் பொருள் சாராப் பண்பாடு எனலாம்.

கொங்கு நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளாளர் குல மக்கள் வேளாண்மை சார்ந்து பயன்படுத்தி வருகின்ற புழங்கு பொருட்களின் பயன்பாடு, அமைப்பு, அவை மக்களின் வாழ்வில் இடம்பெற்றுள்ள தன்மை, பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்ட முற்படுகிறது.

### கொங்கு வேளாளர்கள் வேளாண்மைக்குப் பயன்படுத்தும் பொருட்கள்

### கலப்பை

நிலத்தைப் பண்படுத்த பயன்படும் கருவி. மேழி, ஏர்க்கால், நுகத்தடியுடன் இரண்டு எருதுகளால் உழப்படுவதாகும். மேல் மண்ணையும், கீழ்மண்ணையும் கலப்பதால் கலப்பை எனப் பெயர் பெற்றிருக்கலாம். உழும்பொழுது (1∴2 அடி ஆழம்) மேல் மண்ணும் கீழ் மண்ணும் கலக்கப் பயன்படுகிறது. இதனால் வேர்களுக்குக் காற்றோட்டம் கிடைத்து நன்றாக பயிர் செழித்து வளர முடிகிறது. இதனை,

*'கூளை குடியைக் கெடுக்கும்*
*குட்ட கலப்பை காட்டைக் கெடுக்கும்"*9

என்பது கொங்கு நாட்டு வேளாண் பழமொழியாகும். முனை தேய்ந்த கலப்பை ஆழமாக உழமுடியாது. எனவே குட்டைக் கலப்பை என அழைக்கப்படுகிறது.

### மண்வெட்டி

இரும்புத் தகட்டில் மரக்கைப் பிடிக் கொண்ட கருவி. மண்வெட்டி என்பது பேச்சு வழக்கில் 'மம்முட்டி' என மருவியுள்ளது. ஆண்கள் பயன்படுத்தும் கருவியாகும். பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் பொழுது 'மடை' அடைப்பதற்கும் (மண்ணால் ஏற்படுத்தும் தடுப்புச் சுவர்)'பார்' போடுவதற்கும் (விதை நடுவதற்கு ஏற்றபடி) வாய்க்கால் மண் எடுப்பதற்கும் (சுத்தம் செய்வதற்கும்) பயன்படுகிறது.

### கொத்து

களைகளைக் 'கொத்தி' எடுப்பதற்குப் பயன்படுவதால் 'கொத்து' எனப் பெயர் பெற்றிருக்கலாம். இரும்புத் தகட்டில் மரக்கைப்பிடி கொண்ட பெண்கள் பயன்படுத்தும் கருவியாகும். பயிர்களுக்கிடையில் இருக்கும் களைகளை

வேருடன் கொத்தி எடுப்பதற்குப் பயன்படுகிறது.

**கடப்பாரை**

நீண்ட இரும்பால் ஆனது. ஒரு முனை மட்டும் கூர்மையாகவும், பட்டையாகவும் இருக்கும். கற்களையும் பாறைகளையும் தோண்டி எடுப்பதற்குப் பயன்படுவதால் 'கடப்பாரை' எனப் பெயர் பெற்றிருக்கலாம். மண்ணில் குழி தோண்டுவதற்கும், ஆழமான வேர்களைத் தோண்டி எடுப்பதற்கும் பயன்படுகிறது.

**கொடுவாள்**

நுனியில் வளைந்த தோற்றமும், மரத்தால் ஆன கைப்பிடியும் கொண்ட கருவி. பாதுகாப்பு ஆயுதமாகவும், மரம், செடி போன்றவற்றை வெட்டுவதற்கும் தேங்காய் மட்டை உரிப்பதற்கும் பயன்படுகிறது.

**கருக்கருவாள்**

இரும்பில் பிறை (மெல்லியதாக) வடிவத்தில் மரக்கைப்பிடியுடன் கூடிய கருவியாகும். வளைந்த பகுதி கூர்மையானதாக இருக்கும். பயிர்களை நிலத்திலிருந்து அறுப்பதற்குப் பயன்படுகிறது. (சோளம், மக்காச்சோளம், கம்பு) தட்டு என்பது பயிரின் வேரிலிருந்து நுனிவரையுள்ள சற்று உறுதியான பாகத்தைக் குறிக்கிறது.(நெல், ராகி) தாள் - என்பது பயிரின் மெலிந்த பகுதியைக் குறிக்கும்.

**சல்லைக் கொக்கி**

சன்னமான நீண்ட மூங்கில் குச்சியின் நுனியில் வளைந்த சின்ன கத்தி பொருத்தப்பட்டிருக்கும். உயரத்தில் இருக்கும் மரம், செடி ஆகியவற்றிலிருந்து காய்களைப் பறிப்பதற்கும், வாழை மரத்திலிருந்து இலை அறுப்பதற்கும் பயன்படுகிறது.

**மக்கிரி**

பொருள்களை எடுத்துச் செல்ல மூங்கில், பிரம்பு கொண்டு முடையப்பட்டது. 60-75 கிலோ கொள்ளளவு கொண்டது. பருத்தி சோளம், கம்பு, ராகி போன்ற பொருட்களை நிலத்திலிருந்து களத்திற்குக் கொண்டு சேர்ப்பதற்குப் பயன்படுகிறது.

**சாணிக்கூடை**

அடிப்பகுதி சிறுத்தும் மேல்பகுதி அகன்றும் மூங்கில் பிரம்பால் செய்யப்பட்டிருக்கும். 5-10 கிலோ கொள்ளளவு கொண்டது. மாட்டுக் கட்டுத்தரையிலுள்ள சாணியை எடுத்துச் சென்று வேறு இடத்தில் கொட்டுவதற்குப் பயன்படுகிறது.

**பொட்டிக்கூடை**

பொருட்களை எடுத்துச் செல்ல சன்னமான மூங்கில் தப்பையால் முடையப்பட்டது. இதன் கொள்ளவு ½ கிலோ. உழவர்கள் விதைக்கும் பொழுது தானியங்களைக் கூடையில் போட்டு ஏரின் பின்னே விதைத்துக் கொண்டு செல்வார்கள். எடுத்துச் செல்வதற்கு எளிதாக இருக்கும்.

**முறம்**

மூங்கில் பட்டையால் பின்னப்பட்டு 'ப' வடிவத்தில் தலைப்பகுதி சற்று குவிந்து காணப்படும். தானியங்களில் உள்ள கற்கள் தூசுகள் போன்றவற்றை நீக்குவதற்கு அதாவது நேம்புதல், புடைத்தல், தூற்றுதல் போன்ற செயல்களைச் செய்வதற்குப் பயன்படுகிறது.

**சாட்டைவாறு**

½ அடி நீளமுள்ள சன்னமான மூங்கில் குச்சியின் நுனியில் கெட்டியான நூல்கயிறு (1.˙.2 அடி) நுனியில் மிகச் சன்னமாக இருக்கும். ஏரியிலும், வண்டியிலும் பூட்டிய எருதுகள் வேகமாகச் செல்வதற்காகப் பயன்படுகிறது.

**கண்ணிக் கயிறு**

கெட்டியான நூல் கயிற்றால் 1 மீட்டர் நீளத்தில் முறுக்கிய நிலையில் இணைப்புக் கயிறாகப் பயன்படுகிறது. பேச்சு வழக்கில் 'கண்ணிக்கவுறு' என அழைக்கப்படுகிறது. வண்டியில் பூட்டிய எருது நகராமல் இருப்பதற்கு நுகத்தடி முளைக்குச்சியுடன் மாட்டின் கழுத்தைச் சுற்றி இருப்பது ஆகும்.

**மொகரைக் கயிறு**

மொகரை – முகம். சன்னமான நூல்கயிறு ஒன்றரை மீட்டர் நீளம் உடையது. மாடு, எருமை, காளை முகத்தில் சுற்றிப் போடுவது.(மூக்குக் குத்துவதற்கு முன்பு மட்டும்) கன்றுக் குட்டியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குப் பயன்படுகிறது. மேலும் கட்டிப் போடும் கயிறுடன் இணைக்கப்படுகின்றது.

**மூக்கணாங்கயிறு**

மாடு, எருமை கன்றாக இருக்கும் பொழுது 1 வயதுக்கு மேல் ஆனவுடன் சன்னமான நூல் கயிறு மூக்கில் துளைபோட்டு தலைப்பகுதியுடன் இணைக்கும் கயிறாகும். இதன் நீளம் ¾ -1 மீட்டர் அளவுடையதாக இருக்கும். இக்கயிறு கன்றினைக் கட்டிப் போடும் கியறுடன் இணைக்கப்பட்டிருக்கும். கால்நடைகள் கட்டுப்பாட்டை மீறும்பொழுது சுண்டி இழுப்பதற்குப் பயன்படுகிறது.

**கட்டை வண்டி**

மரத்தால் செய்யப்பட்டு இரண்டு மரச்சக்கரங்களைக் கொண்டு இரண்டு எருதுகளால் இழுத்துச் செல்லக் கூடியதாகும். விவசாயத்திற்குத்

தேவையான பொருட்களை இடம்விட்டு இடம் எடுத்துச் செல்வதற்குப் பயன்படுகிறது. உதாரணமாக தானியம் எரு, விறகு, மண் போன்றவற்றை ஏற்றிச் செல்லப் பயன்டுகிறது.

**டயர் வண்டி**

மரத்தாலோ (அ) இரும்பினாலோ செய்யப்பட்டு டயர் சக்கரங்களைக் கொண்டு எருதுகளால் இழுத்துச் செல்லக்கூடியதாகும்.

**வாய்ப்பொட்டி**

பிறந்த கன்றுகள் மண் தின்னாமல் இருப்பதற்காக வாயின் மேல் போடப்படும் கவசமாகப் பயன்படுகிறது. இது சன்னமான மூங்கில் தப்பையால் இடைவெளிவிட்டு முடையப்பட்டது. காற்றோட்டம் உடையது. கயிற்றில் கட்டி கழுத்துடன் இணைக்கப்படுவதாகும்.

**கொங்காடை**

சாக்குப்பை (சணல், உரச்சாக்கு) கொண்டு அமைத்துக் கொள்ளக் கூடியது. மழைக்காலங்களில் நாற்று நடவுக்காகத் தோட்டத்தில் வேலை செய்யும் பொழுதும், ஆடு, மாடு மேய்ப்பவர்கள் அடைமழைக் காலத்தில் நனையாமலிருக்கவும் அணிந்து கொள்ளக் கூடியதாகும்.

**உணவு முறையில் பயன்படும் பொருள்கள்**

கொங்கு வேளாளர்கள் உணவு முறையில் பயன்படுத்தும் பொருள்களாக 1.மண்ணால் ஆன பொருட்கள் 2.மரத்தால் ஆன பொருட்கள் 3.கல்லால் ஆன பொருட்கள் என்பன.

**மண்ணால் ஆன பொருட்கள்**

உணவு முறைகளைச் சமைப்பதற்கும், பக்குவப் படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் ஏற்ப பொருட்கள் கையாளப்படுகின்றன. பணியாரச் சட்டி, குழம்புச் சட்டி, சுண்டாச் சட்டி, அனச்சட்டி, ஆப்பச்சட்டி, ஊறுகாய்ச் சட்டி, கொத்துச் சட்டி, பலகாரச் சட்டி, கவுச்சிச் சட்டி, கண்ணால் மூடி போன்ற சட்டி வகைகளையும், சோற்றுபானை, அடுக்குப் பானை, கூழ்ப்பானை, கழனிப்பானை,மோர்ப்பானை, நீர்ப்பானை போன்ற பானைவகைகளும் பயன்படுத்துகின்றனர். ஆனால், இன்று பெருமளவில் குறைந்து இதன் பயன்பாடு இருந்தாலும் இம்முறைகளில் உணவு முறைகள் கையாளப்படுகின்றன. கிராமப்புறங்களில் மட்டுமல்லாமல் நகர்ப்புறங்களிலும் இதன் பயன்பாடு போற்றக் கூடியதாகும்.

**மரத்தால் ஆன பொருட்கள்**

மண்ணால் ஆன பொருட்கள் மட்டுமல்லாமல் மரத்தால் ஆன அகப்பை, துடுப்பு, அஞ்சறைப்பெட்டி, உலக்கை, உப்புத்தட்டு, தயிர்மத்து, பருப்புமத்து போன்ற பொருட்களையும் உணவு பழக்கத்தோடு தொடர்புடைய பொருட்களாக பயன்படுத்தி வருகின்றனர்.

**கல்லால் ஆன பொருட்கள்**

ஆட்டுக்கல், அம்மிக்கல், திருகை, உரல் போன்ற கல்லால் ஆன பொருட்கள் பயன்படுத்தப்பட்டாலும் மண்ணால் ஆன பொருட்களைப் போல் இவையாவும் ஒரங்கட்டப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்றே கூறலாம். ஆட்டுக்கல்லிற்குப் பதில் கிரைண்டரும், அம்மிக் கல்லிற்குப் பதில் மிக்ஸியும் இன்று கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் அதிகமாகப் புழக்கத்தில் காணப்படுகிறது.

**வீட்டில் பயன்படும் சில பொருட்கள்**

வீட்டில் பயன்படும் பொருட்களாகச் செம்பு, படி, வள்ளம், வடசட்டி, வாக்கணம், சந்தவை மரம், மைகோதி, உருமாலை என்பன.

**செம்பு**

பேச்சு வழக்கில் 'சொம்பு' என வழங்கப்படுகிறது. உருண்டை வடிவத்தில் ¼,½,¾, 1 லிட்டர் கொள்ளவு கொண்டது. நித்தில வெள்ளித் (Ever Silver) தகட்டால் உருவாக்கப்பட்டது. பெரிய பாத்திரத்திலுள்ள திரவப் பொருட்களை எடுப்பதற்குப் பயன்படுகிறது.

**படி**

இரும்பு (அ) பித்தளையினால் செய்யப்பட்டு 'ப' வடிவத்தில் இருக்கும். பொருள்களை அளப்பதற்குப் (தானியங்கள், பயிறு வகைகள்) பயன்படுகிறது. தற்பொழுது பலதரப்பட்ட அளவுகளில் நித்தில் வெள்ளித் (Ever Silver) தகட்டால் உருவாக்கப்ட்டுள்ளது. 1 கிலோ பொருள் 1 ¼ படி கொள்ளவு கொண்டதாக இருக்கும்.

**வள்ளம்**

இரும்பு (அ) பித்தளையினால் செய்யப்பட்டு 'ப' வடிவத்தில் கீழ்ப்புறம் குழிந்தும் மேலபகுதி அகன்றும் காணப்படும் நான்கு படி கொள்ளளவு கொண்டதாக அமைந்திருக்கம். பொருள்களை அளப்பதற்குப் பயன்படுகிறது.

**வடக்கல் / வடசட்டி**

உணவுகளையும், பலகாரங்களையும் தயாரிக்கப் பயன்படும் குழிவான பாத்திரம், இரும்பு, அலுமினியம், கல் போன்றவற்றால் உருவாக்கப்படுவதாகும். அடிப்பகுதி குறுகியும் வாய்ப்பகுதி அகன்றும், பிடித்து எடுப்பதற்கு ஏதுவாக இரண்டு காது போன்ற வளையங்களும் பொருத்தப்பட்டிருக்கும் ¼ லிட்டர் முதல் 5 லிட்டர்

வரை கொள்ளளவு உடையதாக தயாரிக்கப்படுகிறது. அன்றாட சமையலில் எல்லாவிதமான உணவு தயாரிப்பின் போதும் பெரும்பங்கு வகிக்கின்றது. இனிப்புகள் செய்யவும் பயன்படுகிறது.

**வாக்கணம்**

நீண்ட கைப்பிடியுடன் முகப்பில் குழிந்த பகுதியைக் கொண்டு இரும்பால் செய்யப்படுவதாகும். 100 மி.லி. கொள்ளளவு உடையதாகும். முட்டை பொரிப்பதற்கும், தாளிப்பதற்கும் ஏற்ற வகையில் சூடுபடாமல் இருக்க நீண்ட கைப்பிடியைக் கொண்டுள்ளதாக அமைந்திருக்கும்.

**சந்தவை மரம்**

மூன்று கால்களுடன் இரண்டு பக்கமும் கைப்பிடியுடன் குழிவான அடிப்பகுதியில் நுண்ணிய துளைகளுடன் கூடியதாக அமைந்திருக்கும். 'சந்தவை' என்ற அரிசியில் செய்த உணவு தயாரிக்கப் பயன்படுகிறது. புதுமணத் தம்பதியருக்கு வீட்டில் முதலில் செய்து கொடுக்கும் உணவு வகையாகும்.

**மைகோதி**

மயிர் + கோதி – மைகோதி. தலைமயிரில் உள்ள ஈரத்தை உலர்த்தி, தலைமுடியை ஒழுங்குபடுத்தப் பயன்படுகிறது. ½, 1 அடி நீளத்திற்கும் வெள்ளி, இரும்பு, சில்வர் போன்ற உலோகத்தால் செய்யப்படும் கடினமான கம்பியாகும். பெண்கள் பயன்படுத்தும் பொருளாகும். வகிடு எடுப்பதற்கும், முடியைச் சிக்கலில்லாமல் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் பயன்படுகிறது. கொங்கு வேளாளர்களின் சடங்கிலும் பயன்படுத்தப்படுகிறது.

**உருமாலை**

உழவர்கள் வயலில் வேலை செய்யும் பொழுது பனி, வெப்பம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கக் காதுகளையும், தலையையும் துணியால் (1 மீ – 2மீ) இறுக்கிக் கட்டும் முறையாகும் தலைப்பாகை என்றும் உருமாலைக் கட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

**வேளாளர்களின் உணவு முறைகள்**

மனிதன் உயிர்வாழ்வதற்குத் தேவைப்படும் முக்கியமான பொருட்களில் உணவு ஒன்றாகும். உணவே மருந்து, நாம் உடல் நலமுடன் நோயின்றி வாழ ஆரோக்கியமான உணவே முக்கிய காரணமாகிறது. வேளாளர்கள் தாங்களே பயிரிட்ட தானிய வகைகளையும் காய்கறிகளையும் உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தனர். ஆனால் இன்று அனைவருமே விரைவு உணவு (Fast Food) என்னும் பெயரில் அவசர அவசரமாக சாப்பிடுகிறோம். உணவின் சுவையும் தெரிவதில்லை. 'நொருங்கத் தின்றால் நூறு வயது'' என்ற பழமொழிக்கேற்ப உணவை நன்றாக மென்று உண்ண வேண்டும். அப்போது தான் உணவிலிருந்து கிடைக்கும் சக்தி நம் உடலுக்கு கிடைக்கும் என்று பெரியவர்கள் கூறுவர். கொங்கு வேளாளர் இனத்தினர் தங்களுக்கென தனி அடையாளங்களுடன் உணவு வகைகளை உண்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் கிராமங்களில் இன்றும் பழக்கத்திலுள்ளன எனலாம்.

**தினசரி உணவுகள்**

கொங்கு வேளாளர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன் வரை தினசரி உணவாக ராகி, தினை, சோளம், கம்பு ஆகியவற்றை ராகிக்களி, கம்பஞ்சோறு, கம்பங்கூழ், சோளச்சோறு, சோளக்கூழ் செய்து உண்டனர். தட்டைப்பயிறு, பாசிப்பயிறு, கொள்ளு, துவரம்பருப்பு போன்றவற்றைக் குழம்பு, துவையல், செடினி செய்து களி, சோறு, கூழிற்குப் பயன்படுத்தினர். ஆனால், இன்று அரிசி, கோதுமை அதிக அளவில் உண்கின்றனர்.

**முதல் அறுவடை**

கம்பு, சோளம் காடுகளில் அதிகமாக விளைகின்றன. காடுகளிலிருந்து அவற்றை முதலில் அறுத்து சிறிதளவு எடுத்து ஒன்றாகக் கட்டி வீட்டின் முற்றத்தில் கட்டி வைக்கின்றனர். அதுபோல காடுகளில் விளைந்த புது பச்சைபயிறு, தட்டைப்பயிறு, துவரம் பருப்பு வகைகளுடன் மஞ்சள் பூசனி, (பரங்கிக்காய்) சேர்த்துக் குழம்பு வைக்கின்றனர். உறவினர்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்து உணவருந்துகின்றனர். புறநானூற்றில் இடம் பெற்ற பெருஞ்சித்திரனாரின் மனைவி வறுமை காரணமாக உப்பின்றி வெறும் கீரையைச் சமைத்து தான்மட்டும் உண்ணாமல் சுற்றத்தினர் அனைவரும் உணவருந்திய நிகழ்வு பகுத்து உண்ணும் பண்பைக் கூறுகிறது. அனைவரும் பகத்து உண்ணும் பழக்கம் பண்டைக்காலத்திலிருந்து தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது. ஆனால், தற்பொழுது இப்பழக்கம் சிறிதுசிறிதாக மறைந்து வருவதைக் காண முடிகிறது.

**பூப்படைந்த பெண்ணிற்குத் தரும் உணவு**

பூப்படைந்த பெண்ணிற்கு முதலில் உளுந்து, பச்சரிசி வறுத்துப் பொடி செய்து களி செய்து தருகின்றனர். விடியற்காலையில் முட்டையையும் நல்லெண்ணையையும் குடிக்கத் தருகின்றனர். இதனால் இரத்தம் சீரான அளவுடன் வெளியேறும் என்று கூறுகின்றனர். மேலும் உளுந்து, பச்சரிசி, தேங்காய், பனங்கருப்பட்டி கொடுப்பதால் பெண்ணிற்குத் தேவையான புரதச் சத்தையும் இரும்பு சத்தையும் தந்து உடல் ஆரோக்கியத்துடன்

திகழ உதவுகிறது. இவ்வுணவின் மூலம் இடுப்பு எலும்பும் பிற எலும்புகளும் வலுவுடன் திகழும் என்கின்றனர்.

## குழந்தை பெற்றெடுத்தப் பெண்ணிற்குத் தரும் உணவு

குழந்தை பெற்றப் பெண்ணிற்குக் கொடுக்கும் உணவினைப் ‘பத்தியச் சாப்பாடு’ என்று கூறுவர். தாயின் உணவு முறையின் மூலமே குழந்தையின் உடல் சீராக இருக்கும் என்பதால் குழந்தையை விட தாய்க்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. சுக்கு, மிளகு இரண்டினையும் வறுத்து பனங்கருப்பட்டியோடு இடித்து கலந்து கொள்வர். வெள்ளைப் பூண்டினை உரித்து பச்சையாக சாதத்தில் இட்டு சுக்கு, மிளகு, கருப்பட்டி சேர்ந்த பொடியினை பிறந்த தாயின் வயிற்றில் தங்கியிருக்கும் மீதி அசுத்த இரத்தம் வெளியேறிவிடும் என்றும் வயிற்றிலுள்ள புண் குணமாகும் என்றும் கூறுகின்றனர். மேலும் பூண்டினை உணவில் சேர்ப்பதால் பால் அதிகம் சுரக்கும் என்றும் வாயுத் தொல்லை வராது என்றும் கூறகின்றனர். இவர்கள் உண்ணும் அனைத்துப் பொருட்களும் மருத்துவ குணம் கொண்டவையாகும்.

குழந்தை பெற்றத் தாயிற்குத் தனியாக இரசம் வைத்துத் தருகின்றனர். ஒரு வாரம் வரை இந்த இரசத்தைக் கண்டிப்பாகத் தருகின்றனர். இதனைச் ‘செலவு ரசம்’ என்று அழைக்கின்றனர். வால்மிளகு, திப்பிலி, சதகுப்பை, சுக்கு, மஞ்சள், பூலாங்கிழங்கு, மல்லி, கடல்நுரை, தேசாவரம் ஆகியவற்றை அரைத்து இரசம் வைத்து தருகின்றனர். இதனால் தாயின் உடல் வலிமையுடன் ஆரோக்கியமாகவும் இருக்கும் என்று கூறகின்றனர். குழந்தைக்கு மூன்று மாதங்கள் ஆவதற்கு முன்னரே அனைத்து பருப்பு வகைகள் மற்றும் பழவகைகள் தாயிடம் சிறிதளவு கொடுத்து உண்ணச் செய்கின்றனர். இதனால் வளரும் குழந்தைக்கு மாந்தம் உண்டாவதில்லை என்று கூறுகின்றனர்.

## அம்மை நோயினருக்குத் தரும் உணவு

அம்மை நோய் கண்டவர்களுக்குக் கம்மஞ்சோற்றில் மோர் ஊற்றி பருகத் தருவர். அதனுடன் வெங்காயத்தையும் இணைத்துக் கொடுப்பர். அம்மை நோய் குறையும்போது நோயாளிக்கு வேப்பிலை கலந்த நீரை ஊற்றுவர். அன்று சோளச்சோறு, பச்சரிசி சோறு மற்றும் கொள்ளு பருப்பு வேகவைத்து உருண்டையாக்கி அனைத்து குழந்தைகளுக்கும் கொடுப்பர். அம்மை நோயானது அதிக சூட்டினால் வரும் தொற்று நோயாகும். இதனால் சோளமும், கொள்ளும் உணவில் சேர்த்துக் கொள்வதால் உடல் அதிகம் வெப்பம் அடையாது. அதனால் வருமுன் காப்போம் என்ற வகையில் குழந்தைகளுக்கும் உணவினைத் தருகின்றனர் என்று கூறலாம்.

## விழாக்கால விரத உணவுகள்

கொங்கு வேளாளர்களின் விழாக்கால விரத உணவுகளாக மாங்கல்ய உணவு, திருவாதிரைக் களி உணவு, புரட்டாசி விரத உணவு, பிள்ளையார் வழிபாட்டு உணவு என்பன.

### மாங்கல்ய நோன்பு

திருமணமான முதல் ஆண்டில் மணமகள் கொண்டாடும் நோன்பினை,‘மாங்கல்ய நோன்பு’ என்று கூறுகின்றனர். இதனைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்கின்றனர். அரிசிமாவில் அடை செய்து இனிப்பு பொருட்களையும் செய்து வழிபடுகின்றனர். இன்றைய நிலையில் இனிப்புப் பொருட்களைக் கடையிலிருந்தும் வாங்கி வருகின்றனர். வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, பூ, மஞ்சள், கயிறு, குங்குமம் ஆகியவற்றைக் கொடுத்து அனுப்புகின்றனர்.

### திருவாதிரைக்களி உணவு

திருவாதிரையன்று பச்சரிசியை ஊறவைத்து உரலிலிட்டு ஆட்டி அதனுடன் வெல்லம் கலந்து களிசெய்து உண்கின்றனர். நோன்பினை நோற்பவர்கள் தனித்தனியாகச் செய்யாமல் உறவினர் வீட்டில் ஒன்று கூடி களி செய்து வழிபடுகின்றனர். களியுடன் மஞ்சள் கயிற்றினையும் வைத்து வழிபடுகின்றனர். வீட்டிற்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள் கயிறு, பழம், வெற்றிலை, பாக்கு, குங்குமம், மஞ்சள் ஆகியவற்றைக் கொடுக்கின்றனர்.

### புரட்டாசி விரத உணவு

புரட்டாசி மாதத்தில் சனிக்கிழமையன்று விரதமிருக்கின்றனர். எல்லா வகையான காய்களிலும் ஒவ்வொரு துண்டினை எடுத்து புளிக்குழம்பு செய்து சாப்பிடுகின்றனர். பிரண்டை சட்டினி அன்று கட்டாயமாக இடம் பெற்றிருக்க வேண்டும். பிரண்டையின் கொழுந்தினை எடுத்து வதக்கி புளி, கருப்பட்டி சேர்த்து சட்டினி செய்வர். பிரண்டை குழம்பும் வைப்பார்கள். பிரண்டை வாயு, வயிற்றுப்பொருமலைப் போக்கக் கூடியதாகும். விரதம் இருப்பவர்களின் வயிற்றில் காற்று சேர்ந்து தொல்லைப்படுத்தும். இதனால் பிரண்டையினைச் சேர்த்துக் கொள்கின்றனர் எனத் தோன்றியது.

இவ்வாறு கொங்கு வேளாளர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களையும் உணவு முறைகளையும் அறிந்துகொள்ள முடிகிறது.

# பழமொழிகளில் மருத்துவம்

**வி.ம.ரம்யா**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*கே.எஸ்.ஆர் கலைஅறிவியல் கல்லூரி(தன்னாட்சி)*
*திருச்செங்கோடு – 637 215.*

பழமொழிகள் தொன்றுதொட்டு மக்களுடைய புழக்கத்தில் இருந்து வருபவை ஆகும். இவை மக்களின் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் சமுதாயபின்னணியையும் அறிந்து கொள்வதோடு அல்லாமல் மருத்துவச் செய்திகளையும் அறிந்துகொள்ள உதவுகிறது. மேலும் நோய் வராமல் தடுக்கவேண்டிய வழிமுறைகளையும், நோய் வந்தால் அந்நோய்க்கான மருந்தையும் பழமொழிகளில் மருத்துவர்கள் கூறிச் சென்றுள்ளனர். பண்டைய மருத்துவர்கள் தம் மருத்துவ அறிவைப் பாதுகாக்கும் பெட்டமாக பழமொழிகளைப் பயன்படுத்தினர். இம்மருத்துவ பழமொழிகள் வாயிலாக அறியப்படும் செய்திகள் பற்றி இக்கட்டுரைஆராய்கிறது.

**பழமொழி**

பழமொழிகள் முதுமொழிகள் என்றசொல்லால் வழங்கப்பட்டுள்ளது. இதனை

*“நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றி*
*குறித்த பொருளை முடித்தற்குவரூஉம்*
*ஏது நுதலிய முதுமொழிஎன்ப”*

***(செய்யுளியல் - 488)***

என்று தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது.

உயர்ந்த கருத்துக்களை சுருக்கமாக எளிமையான முறையில் மிகவும் சிறப்பாக கூறுவது முதுமொழி எனலாம். மக்களுக்குக் கூற வேண்டிய அறிவுரைகளை மறைமுகமாகவும் சிலவேளைகளில் மறைமுகமாகவும் எடுத்துக் கூற இப்பழமொழிகள் உதவுகின்றன.

சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் ‘‘பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்’’ (பாடல் 66) என்று பழமொழி என்னும் சொல் பயன்பாட்டில் வந்துள்ளதைக் காணலாம். பழமொழிகள் எதுகை, மோனையோடு அமைந்தவை. அதனால் இயல்பாகவே நினைவைவிட்டு அகலாமல் இருப்பவை எளிமையாக இருப்பதால் சட்டென்று ஆழ்மனதில் நுழைந்து என்றும் நினைவில் நிலைத்திருக்கும் வகையில் அமைந்திருக்கும்.

**“விருந்தும் மருந்தும் மூன்றுநாள்”**

ஒருவர் வீட்டிற்கு விருந்தினராகச் சென்று தங்கியிருக்கும் காலம் குறைவானதாக இருக்கவேண்டும். மூன்றுநாள் மருத்துவத்திலேயே

குணம் தெரிந்துவிட வேண்டும் இல்லையெனில் அந்நோய்க்கு மாற்று மருந்து உண்ணவேண்டும் என்பதை முன்னோர்கள் வலியிறுத்தியிருக்கின்றனர்.

**"பல் போனால் சொல் போச்சு"**

பல் விழுந்துவிட்டால் பேசும் வார்த்தைகளில் தடுமாற்றம் ஏற்பட்டுவிடும். கேட்பவர்களும் எளிதில் புரிந்து கொள்ள முடியாதநிலை உண்டாகிவிடுகின்றது என்பதையே பழமொழி கூறுகின்றது.

**"ஆலும் வேலும் பல்லுக்குஉறுதி"**

பற்கள் விழுந்துவிட்டால் சொல் மட்டுமின்றி உருவத்திலும் பொலிவு குறைந்துவிடும். எனவே பற்களை பேணிக்காப்பது மிகவும் அவசியம் என்ற அனுபவ உண்மையையும் அதனைத் தடுக்கும் வழிமுறைகளாக பல்லுக்கு உறுதி அளிக்கும் ஆலங்குச்சியும், வேலங்குச்சியும் கொண்டு பல் துலக்கவேண்டும் என்றும் வலியிறுத்தி உள்ளனர்.

**"மாதா ஊட்டாத சோறைமா ஊட்டிவிடும்"**

இங்கு மா என்பது மாங்காயை குறிக்கிறது. ஒரு தாயால் கொடுக்க இயலாத ஊட்டத்தை மா கொடுத்துவிடும் என்பதை இப்பழமொழி உரைக்கிறது. உணவில் சேர்த்துக் கொள்ளும் மாங்காய் ஊறுகாய் செரிமான சக்தியைக் கொடுக்கிறது.

உண்ணும் உணவு செரிமானம் ஆனாலே உடல் ஆரோக்கியம் அடைந்து நோய் இல்லாமல் வாழலாம் மாவின் அனைத்துப் பாகங்களும் மருந்தாகப் பயன்படுகின்றது.

**"ஆயிரம் வேரைக் கொன்றவன் அரைவைத்தியன்"**

இயற்கை அன்னை நமக்கு வழங்கியுள்ள பெரும் கொடைகளுள் மூலிகைகள் முக்கியமானவை. உலகில் கிடைக்கின்ற பல்வகை மூலிகைகளின் வேர்கள் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. மூலிகைகள் சிறிய அளவிலோ அல்லது முற்றிலுமாகவோ அழியவாய்ப்புள்ளது. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைவைத்தியன் என்று தவறான பொருளில் அர்த்தம் கொண்டுள்ளனர்.

**"இளைத்தவனுக்கு எள்ளுகொடு கொளுத்தவனுக்கு கொள்ளுகொடு"**

எள் என்பது நல்ல சத்துள்ள உணவாகும். மெலிந்த தேகம் உள்ளவர்கள் எள்ளை உண்டுவர ஆரோக்கியம் அடைந்து உடல் பெருக்கும். உடல் பருமனாக இருப்பவர்கள் கொள்ளை உணவில் சேர்த்து உண்ண தேவையற்றக் கொளுப்புகள் குறைந்து உடல் மெலியும் என்று இப்பழமொழி உரைக்கிறது.

**"அரசமரத்தைச் சுற்றிவந்து அடிவயிற்றை தொட்டுப் பார்த்தாளாம்"**

